This Question Paper consists of **37 questions** [Section-A (19)+Section-B(9+9) and **6 printed pages.**

**Roll No.** | | | | | | | | | | | | | **Code No. 62/SS/N/TM**

# (தமிழ்)
# TAMIL
# (304)

**Set A**

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ______________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் **1.** ______________________

**2.** ______________________

---

**பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**4.** உங்களது வினாத்தாளின், எண் **62/SS/N/TM** மற்றும் செட் **A** எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.

# (தமிழ்)
# TAMIL
# (304)

காலம் : **3** மணி ] [ மொ. மதிப்பெண் : **100**

அறிவிப்பு :

(i) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(ii) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(iii) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப் பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(iv) வினாக்களுக்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி - அ

**குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ஓரிரு சொற்களில் விடை தருக :** **17x1=17**

**1.** கவிமணி எவை தாயைப் பெரும் பித்தி ஆக்குவதாகக் கூறுகின்றார் ? **1**

**2.** முக்கூடலுக்குத் தற்போது வழங்கும் பெயர் யாது ? **1**

**3.** மீக் கூற்றம் - பொருள் தருக. **1**

**4.** இரட்சணிய யாத்ரிகம் என்ற நூலின் மூல நூல் எது ? **1**

**5.** ஆதன் யார் ? **1**

**6.** நோன்தாள் என்றால் என்ன ? **1**

**7.** கதவு சிறுகதையின் ஆசிரியர் யார் ? **1**

**8.** மிகப் பெரிய தண்ணீர்ப் பறவைகள் சரணாலயம் எங்குள்ளது ? **1**

9. ஏன் முடியாது ? நாடகத்தில் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டியது யார் என வேதவதி கூறினாள் ? 1

10. காவலன் எந்தக் கிண்ணத்தில் பாலை வைத்தான் ? 1

11. முக்கூடலும் சந்திக்கும் இடம் எது ? 1

12. காடும் காடு சார்ந்த பகுதிகளும் _________ எனப்படும். 1

13. அவன் என்பது _________ சுட்டாகும். 1

14. தாழ் குழல் - இலக்கணக் குறிப்பு தருக. 1

15. உடம்படாத இரு உயிர் எழுத்துகளை உடம்படுத்த வரும் மெய் _________ ஆகும். 1

16. நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்வது _________ எனப்படும். 1

17. Compact disc -இச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் _________ ஆகும். 1

18. **(அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **3x4=12**

    (a) ஆற்றில் வெள்ளம் வருவதற்கான அறிகுறிகள் யாவை ?

    (b) செத்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே விளக்குக.

    (c) இன்குலாபின் சிறைச்சாலை கவிதையிலுள்ள நகைச்சுவை பண்பை குறிப்பிடுக.

    (d) நற்றிணை பாடல் கூறும் தோழியின் கடமையுணர்வை விளக்குக.

    **(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **3x4=12**

    (a) பழந்தமிழரின் உழவு முறை பற்றி எழுதுக.

    (b) பூனைகளுக்குப் பால் கொடுக்காததற்கு தெனாலிராமன் கூறிய காரணம் யாது ?

    (c) சிறுகதை எழுதுவதற்குரிய ஆயத்தப் பணிகள் யாவை ?

    (d) தொல்காப்பியம் - சிறு குறிப்பு வரைக.

    **(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x4=8**

    (a) வேலை வேண்டி விண்ணப்பம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

    (b) தன்விவரக் குறிப்பில் இடம் பெற வேண்டிய செய்திகள் யாவை ?

    (c) விளம்பரத்தின் தீமைகள் யாவை ?

**19.** **குறிப்பு : ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.**

**(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x6=12**

(a) புறாக்களின் வாழ்க்கை ஒழுக்கமுடையது என்பதைப் பாரதிதாசன் எவ்வாறு விளக்குகின்றார்?

(b) சுகந்தி சுப்பிரமணியனின் வாழ்க்கை என்ற தலைப்பிலான கவிதை உணர்த்தும் கருத்து யாது ?

(c) ஆசார வித்து எவை ?

(d) கல்வியின் சிறப்பு யாது ?

**(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **3x6=18**

(a) தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உயர்வான சிந்தனைகள் குறித்து எழுதுக.

(b) 'ஏன் முடியாது' நாடகத்தை கதை கரு சிதையாமல் விளக்குக.

(c) மதுரை நகரின் சிறப்புகளை எடுத்துரைக்கவும்.

(d) கதவு சிறுகதை மூலம் அறியும் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக் கூறுக.

(e) கோயில்கள் வளர்க்கும் மனங்கவர் கலைகள் பற்றி நீவிர் அறிவன யாவை ?

(f) தமிழ்மொழியின் தனித் தன்மையை நும் பாடப்பகுதி கொண்டு விவரிக்கவும் ?

**(இ) ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **1x6=6**

(a) டாக்டர் முத்துலெட்சுமி உருவாக்கிய தொண்டு அமைப்புகள் பற்றி எழுதுக.

(b) களவு போன கனவு சிறுகதையை சுருக்கி எழுதுக.

## பகுதி - ஆ

## விருப்பப் பாடம் - I

## (இணையமும் தமிழும்)

**20.** ஸ்பாம் என்பது : **1**

(a) தேவையற்ற இ-மெயில்கள்

(b) பறவை

(c) கணினியில் உள்ள ஒரு பகுதி

(d) ஒரு நோய்

**21.** நாம் அனுப்பும் மெயில்களைப் பாதுகாத்து வைக்கப்படும் பகுதிக்குபு பெயர் __________. **1**

**22.** நூலகம் நெட்டின் இணைய முகவரி என்ன ? **1**

**23.** இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் எங்குள்ளது ? **1**

**24.** ஈழத்து நூல்களை எந்த நூலகத்தில் எளிதில் பெறலாம் ? **1**

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **1x4=4**

**25.** அழைப்பு என்பது குறித்து விளக்கம் தருக.

**26.** மின்னூலகம் என்பது யாது ?

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **1x6=6**

**27.** மின்னஞ்சல், நாம் அனுப்பும் சாதாரண அஞ்சல் இரண்டின் ஒப்பீட்டு அம்சங்களை விளக்கி ஒரு குறிப்புரை எழுதவும்.

**28.** விசைப்பலகை இயக்கி என்றால் என்ன ?

## விருப்பப் பாடம் - II

## (மேலாண்மை இயலும் தமிழும்)

**20.** எத்தகைய விவரங்கள் நிகழ்வுக் குறிப்பில் சேர்க்கப்பட வேண்டும் ? **1**

**21.** கடிதத்தின் பயன்கள் இரண்டனைச் சுட்டுக. **1**

**22.** உற்பத்தி மேலாண்மையின் அவசியம் பற்றி எழுதுக. **1**

**23.** திட்டமிடுதல் என்றால் என்ன ? **1**

**24.** செய்தித் தொகுப்பு என்றால் என்ன ? **1**

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **1x4=4**

**25.** நெறிப்படுத்துதல் என்றால் என்ன ?

**26.** கடிதம் - விளக்கம் தருக.

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **1x6=6**

**27.** தொகுத்து எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டியன யாவை ?

**28.** கடிதம் எழுதும் முறையினை விளக்கியுரைக்கவும்.

**- o O o -**